# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2006 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, பிராந்திய உட்கட்டமைப்பு அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம்

---

*(2006 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 15 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

2006, திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை : ரூபா 5.25** **தபாற் செலவு : ரூபா 5.00**

**2006 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க பிராந்திய உட்கட்டமைப்பு அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம்**

[2006 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 15 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஓ. 80/2006

**2007 ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்டப் பிரேரணையொன்றின் விளைவாக பிராந்திய உட்கட்டமைப்பு அபிவிருத்தி அறவீடு என அழைக்கவும், பிராந்திய உட்கட்டமைப்பு அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படவும் வேண்டிய அறவீடொன்றின் விதிப்பனவுக்கு ஏற்பாடு செய்வதற்கும் ; அத்துடன் அதனோடு தொடர்புடைய அல்லது அதற்கு இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாக :—

சுருக்கப் பெயர்.

**1.** (1) இச்சட்டம், 2006 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, பிராந்திய உட்கட்டமைப்பு அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

(2) இச்சட்டத்தின் ஏற்பாடுகள் எல்லா நோக்கங்களுக்காகவும் 2006, நவெம்பர் 17 ஆம் தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ள தாகக் கருதப்படுதல் வேண்டும்.

பிராந்திய உட்கட்டமைப்பு அபிவிருத்தி அறவீட்டை விதிப்பனவு செய்தல்.

**2.** ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தொன்பதாம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் உற்பத்தித்தீர்வையைச் செலுத்தும் பொறுப்புடைய எல்லா மோட்டார் வாகனங்கள்மீதும் (இதனகத்துப்பின்னர் “அறவீடு” எனக் குறிப்பீடு செய்யப்படும்) பிராந்திய உட்கட்டமைப்பு அபிவிருத்தி அறவீடு எனவழைக்கப்படுவதும், இறக்குமதி செய்யப்படும் நேரத்தில் (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் அட்டவணை உ இன் நியதிகளின்படி தீர்மானிக்கப்பட்ட அத்தகைய மோட்டார் வாகனங்களின் சுங்கப்பெறுமதியும் அவற்றின்மீது அறவிடப்படும் எல்லா வரிகளும், தீர்வைகளும், அறவீடுகளும் அடங்கிய கூட்டுமொத்தப் பெறுமதியின்மீதான 2.5 சதவீதத்தில் கணக்கிடப்பட்ட தொகையொன்றாகவுள்ளதுமான அறவீடொன்று இறக்குமதி செய்யப்படும் நேரத்தில் இறுக்கப்படுதலும் அறவிடப்படுதலும் வேண்டும்.

இப்பிரிவின் நோக்கங்களுக்கு, மேலே குறிப்பீடு செய்யப்பட்ட “மோட்டார் வாகனங்கள்” என்னும் சொல்லமைப்பு உந்து விசை மோட்டார் முச்சக்கரவண்டியை உள்ளடக்கமாட்டாது.

*விலக்களிப்பு.*

**3.** இரண்டாம் பிரிவிலுள்ள எதுவும் 1996 ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க, இராச தந்திர சிறப்புரிமைகள் சட்டத்தின் ஏற்பாடுகள் எந்த அரசின் தூ தரகம் அல்லது ஒழுங்கமைப்புக்கு ஏற்புடைய தாகுமோ அவ்வரசின் தூ தரகமொன்றினால் அல்லது ஏதேனும் ஒழுங்கமைப்பினால் ஏதேனும் சேவை வழங்குதல் தொடர்பில் இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்படும் ஏதேனும் மோட்டார் வாகனத்திற்கு ஏற்புடையதாதல் ஆகாது.

*அறவீடானது சுங்கத் தீர்வை யொன்றாகக் கருதப்படுதல்.*

**4.** அறவீடானது இச்சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப் பினும் அறவீட்டை அறவிடும் நோக்கங்களுக்காக, (235 ஆம் அத்தி யாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின்கீழ்ச் செலுத்தப்படற் பாலதான சுங்கத்தீர்வையொன்றாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அதற்கிணங்க சுங்கக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடு கள் அத்தகைய அறவீட்டின் அறவீட்டிற்கு ஏற்புடையனவாதலும் வேண்டும்.

*அறவீடு திரட்டு நிதியத்திற்கு அனுப்பப்படுதல்.*

**5.** சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி அறவீடாக அவரால் அறவிடப்பட்ட எல்லா பணத்தொகைகளையும் திரட்டுநிதியத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

*நட்டோத்திர வாதம்.*

**6.** இச்சட்டத்தின் நியதிகளின்படி 2006, நவெம்பர் 17 ஆம் தேதி தொடக்கம் இச்சட்டம் தொடங்கும் தேதியன்று முடிவடையும் காலப்பகுதியின்போது பிராந்திய உட்கட்டமைப்பு அபிவிருத்தி அறவீடாக சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதியால் ஏதேனும் தொகை சேகரிக்கப்பட்டுள்ளவிடத்து அவ்வாறு சேகரிக்கப்பட்ட பிராந்திய உட்கட்டமைப்பு அபிவிருத்தி அறவீடு செல்லுபடியான விதத்தில் சேகரிக்கப்பட்டுள்ளதாக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அந்தந்த இயைபான அதிகாரிகள் மேற்கூறப்பட்ட அறவீட்டின் சேகரிப்புத் தொடர்பில் ஏதேனும் குடியியல் அல்லது குற்றவியல் வழக்கிலிருந்து இத்தால் நட்டோத்திரவாதமளிக்கவும் படுகின்றனர்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**7.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்